
மூதுரை
ஔவையார்

**மூதுரை**, ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல். பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் இது **மூதுரை** ((முதுமை + உரை) என அழைக்கப்படுகிறது.

இதற்கு வாக்குண்டாம் என்ற இன்னொரு பெயரும் உண்டு. இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் "வாக்குண்டாம் "(வாக்கு+உண்டாம்) என்று வழங்கப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது.


மூதுரை
அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு
– ஔவையார்



வகுப்பு-5
பருவம்-1
மூதுரை
செய்யுள்
அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு
– ஔவையார்

# விளக்கம்

பாய்கின்ற நீரில் ஓடக்கூடிய சிறு மீன்கள் ஓடிக்கொண்டிருந்தாலும், கொக்கானது தனக்கு  இரையாகக் கூடிய பெரிய மீன்கள் வரும்வரை அசைவின்றிக் காத்துக்கொண்டிருக்கும். அதுபோலத் தமக்கு உரிய காலம் வரும் வரை சிலர் அடங்கி இருப்பார்கள். அவர்களை அறிவில்லாதவர் என எண்ணி வெல்வதற்கு நினைக்கக் கூடாது.

https://www.youtube.com/watch?v=RwHTrPm8e1Q

